**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW-1 | Date | : 06.08.2024 |
| Case No. | : **O.S.494/2019** | Nationality | : Indian |
| Name | : மாதவி | Religion | : |
| Father's/Husband's Name | : சிவசுப்ரமணியன் | Age | : 41 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி சதீஷ்குமாரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் ராமலிங்கம். அவர் எனக்கு என்ன உறவு என்றால் சித்தப்பா ஆவார். வழக்குரையில் பிரதிவாதி எனது சித்தப்பா மகன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கு என்ன காரணம் என்றால் அவருக்கும் எங்களுக்கும் இடையே இடப்பிரச்சனை இருந்து வருவதால் பேச்சு வார்த்தை இல்லாமல் இருந்து வந்தது. அதனால் குறிப்பிட்டு சொல்லவில்லை. சுமார் 10 வருட காலமாக எங்களுக்கும் பிரதிவாதி குடும்பத்திற்கு பேச்சு வார்த்தையில்லை என்றால் சரிதான். ராமலிங்கம் என்ன வேலை செய்து வந்தார் என்றால் உதவி தொடக்க கல்வி அலுவலராக பணிபுரிந்தார். அவர் எப்போது இறந்தார் என்றால் அவர் 06.05.2024 ம் தேதி இறந்துவிட்டார். ராமலிங்கத்தை வழக்கின் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ராமலிங்கம் இவ்வழக்கின் வாதிகள் மற்றும் எனது அத்தை மகன்களுக்கு எதிராக பாகபிரிவினை கோரி கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 29/2021 என வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கில் நான் 6 ம்

பிரதிவாதி ஆவேன் என்றால் சரிதான். அந்த வழக்கினை நான் வழக்கறிஞர் மூலமாக நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பிராது நகல் மேற்படி வழக்கில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். ( கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண் 29/2021 ல் கண்ட வழக்குரையின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பிசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து எந்த கிராமத்தில் உள்ளது என்றால் துகிலி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் புல எண்கள் தெரியுமா என்றால் புல எண் 204/5 ல் 1 ஏர்ஸ். புல எண் 204/3 ல் 3 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள புஞ்சை நிலம் மற்றும் புல எண் 204/2 ல் 0.26.50 ஏர்ஸ், புல எண் 204/4 ல் 0.28.0 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள நஞ்சை நிலங்கள் தாவா சொத்துக்களாகும். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் 9 வது இன சொத்தாக புல எண் 204/2 மற்றும் புல எண் 204/3 சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் 9 வது இன சொத்தாக புல எண் 204/2 மற்றும் புல எண் 204/3 சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் 4 வது இன சொத்தாக புல எண் 204/4 மற்றும் புல எண் 204/5 சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வழக்கு தாக்கல் செய்தபோது தாவா சொத்துக்களில் என்ன பயிர் செய்யப்பட்டிருந்தது என்றால் நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. என்ன வகை நெல் சாகுபடி செய்யப்பட்டிருந்தது என்றால் குண்டு நெல் என்று சொல்வார்கள் எனக்கு சரியாக தெரியவில்லை. இந்த வருடம் தாவா சொத்துக்களில் என்ன சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சன்ன ரக நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களில் குண்டு ரகம், சன்ன ரகம் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது என்பதை காட்டுவதற்கு அடங்கல் ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம். எனது தகப்பனார் கோவிந்தராஜ் எப்போது இறந்தார் என்றால் 14.12.2012 ம் தேதி இறந்தார். அவரது

மனைவி பெயர் சகுந்தலா என்றால் சரிதான். சகுந்தலா எப்போது இறந்தார் என்றால் 2017 ம் ஆண்டு ஜூலை மாதம் இறந்துவிட்டார். எனது தகப்பனார் அவரது மனைவி சகுந்தலா உயிருடன் இருக்கும் காலத்திலேயே எனது தாயரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தினை எனது தகப்பனார் கிரயம் பெற்றதற்கான கிரய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

3. தாவா சொத்திற்கு பயிர் கடன் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். இவ்வழக்கில் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. மேற்படி எதிர் வழக்குரையை மறுத்து நான் பதில் எதுவும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நாங்கள் தாவா கிராமத்தில் வசித்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கு ஆதார் அடையாள அட்டை மற்றும் குடும்ப அட்டை போன்ற ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளோம். வழக்குரையில் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அடையாள அட்டை தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞருக்கு விவரம் கூறியது யார் என்றால் எனது தாயாரான 1ம் பிரதிவாதி கூறினார். அதனால் எனது தாயாரை விசாரித்தால்தான் உண்மை நிலவரம் தெரிய வரும் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு தற்போது உடல்நிலை சரியில்லை.

4. எனது தகப்பனார் கோவிந்தராஜூக்கும் சகுந்தலாவிற்கும் குழந்தைகள் பிறந்ததா என்றால் இல்லை. குழந்தையில்லாததால் சகுந்தலாவின் உடன்பிறந்த தங்கையான எனது அம்மா ஜெயலெட்சுமியை திருமணம் செய்து கொண்டு 2 முதல் 4 வாதிகள் அவருக்கு வாரிசுகள் ஆவார்கள். மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் ஏன்

சொல்லவில்லை என்றால் எனது அம்மா சகுந்தலா 2017ம் ஆண்டு இறந்துவிட்டதால் 2019ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கில் சொல்லவில்லை. நான் எம்.எஸ்.சி.எம்.பில் படித்துள்ளேன். அதனால் என்னால் ஆங்கிலம் படித்து புரிந்துகொள்ள முடியும் என்றால் சரிதான். வழக்குரை பாரா 3 ல் The 1st plaintiff G. Jayalakshmi is the wife of V. Govindaraj என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் நீதிமன்றத்திற்கு தவறான தகவல் அளித்து இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் மேற்படி தகவல் தவறானதுதான்.

5. பாகப்பிரிவினை வழக்கில் கூட்டு குடும்ப சொத்துக்களும் உள்ளது என்றால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் எனது அப்பா பெயரில்தான் உள்ளது. அவை கூட்டு குடும்ப சொத்துக்கள் இல்லை. ராமலிங்கம் மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் அசல் கிரய ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ( **பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- N. Sivapalani,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.